**இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**OS.51/2017**



21.11.2019

**வா.ச.1 :திரு.முருகேசன்**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

என்னுடைய கூடுதல் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் தெரியும்.

28.11.2002 ம் தேதி அன்று முதல் வாதி மணிவண்ணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.26. 29.11.2002 ம் தேதியில் பொது அதிகார முகவரான மணிவண்ணனால் அவருடைய தகப்பனாரான ரங்கசாமி என்பவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தத்தின் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.27. 30.12.2003 தேதியன்று 1 ம் வாதி மற்றும் ரங்கசாமிக்கிடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.28. 13.10.2004 தேதியில் 1 ம் வாதி மற்றும் சரவனனுக்கு இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.29. 30.12.2003 ம் தேதியில் 1 ம் வாதி மற்றும் சரவனனுக்கு இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.30. 15.2.2007 தேதிய 1 ம் வாதியான என் தகப்பனாருக்கும் அப்பாஸ் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.31. 13.3.2013 தேதிய 1 ம் வாதியான என் தகப்பனாருக்கும் அப்பாஸ்க்கும் இடையே ஏற்பட்ட

கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.32. 13.3.2013 தேதியில் 1ம் வாதி மணி, சரவணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.33. 10.5.2013 தேதியிட்ட 1ம் வாதியான என் தகப்பனாருக்கும், சரவணன்க்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.34. 22.3.2013 தேதியிட்ட 1ம் வாதியான என் தகப்பனார் கனகசுந்தரம், கே.லோகநாதன் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.35. 16.03.2015 தேதியில் கனகசுந்தரம், கே.லோகநாதன் ஆகியோர் என் தகப்பனார் பெயருக்கு எழுதிக் கொடுத்த அடமான கடன் வரவு ரசீது வாசாஆ.36. 16.3.2015 தேதியில் 1ம் வாதியான என் தகப்பனார் கனகசுந்தரம், கே.லோகநாதன் ஆகியோருக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.37. 28.08.2015 தேதியில் கனகசுந்தரம், கே.லோகநாதன் ஆகியோர் என் தகப்பனார் பெயருக்கு எழுதிக் கொடுத்த அடமான கடன் வரவு ரசீது வாசாஆ.38. 16.9.2014 தேதியில் 2ம் பிரதிவாதியின் பெயரில் 1ம் வாதியான என் தகப்பனாரும், நானும், என் சகோதரர் எம்.செல்வகுமார் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாசாஆ.39.

(வாசாஆ.26 முதல் 39 வரையான ஆவணங்கள் 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் மேற்சொன்ன ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

மு.வி.நிறைவுற்றது.